# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

****************

**முறையீட்டு மனு எண்: 090/2017பே–2**

**ஆணை எண் . 117 /2018 நா. 07–05–2018**

திரு. டி. ஐசக் பொன்னுத்துரை,
230 மேல் முகம் நாடார் தெரு,
கல்லிடைக் குறிச்சி,
திருநெல்வேலி மாவட்டம். — முறையீட்டு மனுதாரர்

முன்னாள் பேரூராசித் தலைவர்
மற்றும் செயல் அலுவலர்கள் மூவர்,
கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம். — எதிர் மனுதாரர்கள்.

**ஆணை.**

திரு த. ஐசக் பொன்னதுரை, 230 மேல்முகம் நாடார் தெரு, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி மாவட்டம், அவர்களின் 10.04.2017 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.04.2017ல் பெறப்பட்டு முறையீட்டு மனு எண் 90/2017 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் முறையாக பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு த. ஐசக் பொன்னுதுரை, முறையீட்டு மனுதாரர் தனது புகார் மனுவில் திருநெல்வேலி மாவட்டம், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி முன்னாள் தலைவர் மற்றும் செயல் அலுவலர்கள் மீது கீழ்கண்ட புகார்களை தெரிவித்து தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

1. கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியில் அனைத்து இறைச்சிக் கடைகள் மற்றும் மீன் அங்காடிகளை பேரூராட்சி சந்தைக்கு கீழ்புறமுள்ள இடத்தில் வைத்து நடத்த பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண். 232/நாள் 12.03.1998ல் நிறைவேற்றி, ஆடு அறுப்பு தொட்டியினை 2004–05ம் ஆண்டு (I.D.S.M.T.) ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ 18.00 லட்சம் மதிப்பீட்டில் சகல வசதிகளுடன் கூடிய 18 மட்டன் கோழி மீன் மற்றும் கருவாட்டு கடைகள்

அமைக்கப்பட்டு கடைகள் ஏலம் விடப்பட்டும் ஏலம் எடுத்தவர்கள் பினாமிகளுக்கு கொடுத்துவிட்டு வெளியில் ஆக்கிரமிப்பு இடத்தில் இறைச்சிக் கடைகளை கட்டி நடத்தி வருவதால் மேற்படி கடைகளை அகற்றி சந்தைப் பகுதிக்கு கொண்டு செல்லப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார். மேற்கண்ட 18 கடைகளை 2005–06 முதல் 2009–10 வரை குறைந்த ஏலத் தொகைக்கு விடப்பட்டதின் மூலம் பேரூராட்சிக்கு இழப்பீடு ஏற்பட்டதாக தெரிவித்துள்ளார்.

2. 29.09.2011ல் பேரூராட்சித் தலைவராக இருந்த திரு க.இசக்கிபாண்டியன் என்பவரால் இறைச்சி கடை வியாபாரிகள் பேரூராட்சி பகுதியின் வெளிப்புறத்தில் அரசு இடங்களில் கடைகள் வைத்துக் கொள்ள அனுமதித்து அதற்கான தீர்மானம் இயற்றப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். பேரூராட்சி நிர்வாகம் அனுமதி அளித்ததை தொடர்ந்து பேரூராட்சி பகுதிகளில் அரசு நிலங்கள் மற்றும் பஸ் ஸ்டாப் முதல் சந்தை வரை உள்ள கழிவு நீர் ஓடைகள், சாலை மழைநீர் வெள்ள வடிகால்களில் ஆக்கிரமிப்புகள் செய்து மேற்படி கடைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.
3. இது சம்பந்தமாக பல புகார் அனுப்பியும் பேரூராட்சி நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவித்துள்ளார்.
4. மேற்படி ஆக்கிரமிப்புகளை 16.10.2009ல் 10 தினங்களுக்குள் அகற்றுவதாக தெரிவித்தும் 9 ஆண்டுகளாக மேற்படி ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.
5. 2009–10 ம் ஆண்டு முதல் 2010–11ம் ஆண்டு வரை குடிநீர் இணைப்புகள் வழங்கியதில் முறைகேடு எனவும் புகார் தெரிவித்துள்ளார்.
6. சார் ஆட்சியர், சேரன்மாதேவி மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற பரிந்துரைத்தும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் இது சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ளார்.
7. பேரூராட்சி வணிக வளாக கடைகளின் உரிமையாளர்கள் தனி நபர்களுக்கு வாடகைக்கு விட்டு வெளியில் ஆக்கிரமிப்பு இடத்தில் இறைச்சிக் கடைகளை நடத்துவதாகவும், மேற்படி கடைகள் 2005–06ம் ஆண்டு முதல் 2010–11ம் ஆண்டு வரை 18 கடைகளும் ஏலம் விடப்படாமல் குறைவான எண்ணிக்கையிலான கடைகள் மட்டுமே ஏலம் விடப்பட்டதாகவும் இதனால் குறைந்த அளவிலேயே ஏலத் தொகை பெறப்பட்டுள்ளதாகவும், ஆனால் பேரூராட்சி நிர்வாகம் அனைத்துக் கடைகளும் ஏலம்விடப்பட்டு தொகை வசூலிப்பதாக தெரிவித்துள்ளதாகவும் தனது புகார் மனுவில் தெரிவித்து இது குறித்து முழுமையான விசாரணை கோரியுள்ளார்.
8. கல்லிடைகுறிச்சி சிங்கம்பட்டி பிரதான சாலையில் CSI கிருஸ்துவ ஆலயத்திற்கு வடபுறம் சிங்கம்பட்டி ரோட்டிற்கு கிழக்கு, சாமுவேல் வாத்தியார் வீட்டிற்கு செல்லும் நடைபாதைக்கு தெற்கு செல்வம் காலிமனைக்கு மேற்குமான இடம் பஞ்சாயத்திற்கு சொந்தமான இடம் என கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி 24.08.2000ம் ஆண்டில் தீர்மான எண். 197ன் வாயிலாக தெரிவித்துள்ளதாகவும், இந்த இடத்தில் அரசுக்கு சொந்தமான வற்றாத பொது கிணறு இருந்ததாகவும், இந்தஇடங்களைகல்லிடைகுறிச்சி மேல்முகம் நடார் தெருவில் வசித்து வரும் திருமதி

ஆர்.ராஜம்மாள் என்பவர் துணிகரமாக ஆக்கிரமிப்பு செய்து அதனை சுற்றி வேலி அமைத்துள்ளதால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறும், கழிவு நீர் செல்ல இயலாதபடி உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் இது சம்பந்தமாக தனக்கு தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் மேற்படி இடம் தனி நபருக்கு சொந்தமானது அல்ல எனவும் பேரூராட்சியால் பராமரிக்கப்பட்டு வருவதாகவும், பதில் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் அரசு பொது கிணறு உள்ள இடத்தில் வீடு உள்ளது என தெரிவித்து அதற்கு கதவிலக்க எண் 75F என தெரிவித்து வரிவிதிப்பு எண் 9778 ன் மூலம் ரசீது கொண்ட தீர்வை வழங்கியுள்ளதாகவும் அம்பாசமுத்திரம் மண்டல துணை வட்டாட்சியர் ந.க.எண்.2/305/2009/நாள் 14.08.2009ன் மூலம் புல எண் 1075– உட்பிரிவு எண் 21 பழைய புல எண் 140/1பா (ச) புறம்போக்கு இடம் என பட்டா வழங்கியுள்ளதாகவும் ரூ.10.00 லட்சம் பெறுமானமுள்ள இடம் திருமதி ஆர். ராஜம்மாள் என்பவருக்கு எந்த அடிப்படையுமின்றி பட்டா வழங்கப்பட்டு சொத்து வரி ரசீதும் வழங்கப்பட்டுள்ளது எனவும் புகார் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி திருமதி ஆர். ராஜம்மாள் என்பவரின் மகன் திரு ஆர். முருகன் என்பவர் விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியில் சுகாதார மேற்பார்வையாளராக பணிபுரிவதால் கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் தனது மனுவில் புகார் தெரிவித்துள்ளார்.

9. மேற்குறிப்பிட்டுள்ள சிங்கம்பட்டி சாலைக்கு வடக்கில் உள்ள திரு ந. இசக்கிமுத்து என்பவர் கருவாட்டு மீன் கடை நடத்தி வருவதாகவும் இவருக்கும் மேற்படி பேரூராட்சி வணிக வளாகத்தில் உள்ள 18 கடைகளில் ஒரு கடை ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் மேற்படி கடையினை பினாமியாக வைத்துக் கொண்டு அரசு புறம்போக்கு நிலத்தில் கடை வைத்து அதற்கு சொத்து வரியும் செலுத்தி வருவதாக தனது புகார் மனுவில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்து நடவடிக்கை கோரியுள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 24.04.2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்கண்ட புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்க கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 61/2014/நாள் 12.05.2017ன் மூலம் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி பகுதியில் ஆடு, கோழி, மற்றும் மீன் கடைகள் அனைத்தும் பேரூராட்சி மன்றத்தின் 29.09.2010ம் நாளிட்ட தீர்மான எண். 199 ன்படி கல்லிடைகுறிச்சிக்கு சொந்தமான சந்தை ப்குதியானது மக்கள் வசிக்கும் மேற்கு பகுதியில் இருந்து வெகு தொலைவில் உள்ளதால் பொது மக்கள் இப்பகுதியில் இயங்கும் கடைகளுக்கு வராமல் மேற்கு பகுதியில் இருக்கக்கூடிய மூலச்சி மற்றும் வைராவிகுளம் ஊராட்சி பகுதியில் இருக்கும் கடைகளுக்கு செல்வதாக தெரிவித்துள்ளார். ஆகையால் பேரூராட்சி வளாகத்தில் உள்ள இறைச்சிகடைகள் வியாபாரம் இல்லாத நிலையில் ஒரு சிலர் கடை நடத்த முன் வராததாலும் நஷ்டம் ஏற்படும் என்ற பயத்தினாலும் சிலர் மட்டுமே கடைவைத்துள்ளதாக தெரிவித்துள்ளார். இதனால் பேரூராட்சிக்கு இழப்பு ஏற்படுவதினாலும், ஆடு அடிக்கும் தொட்டி தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினால் கடைகள் நடத்த சிரமமான நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பகுதியில் மருத்துவமனை, ஆலயங்கள், பள்ளிக்

கட்டிடங்கள், திருமண மண்டபங்கள், பேருந்து நிலையம், மற்றும் கீழ்பகுதி குடியிருப்பு பகுதிகள் அமைந்துள்ளதால் பறவைகள் இறைச்சிக் கழிவுகளை கொண்டு செல்வதால் பொதுமக்களுக்கும் அங்கு வருபவர்களுக்கும் சுகாதரக் கேடு ஏற்படுவாகவும் இதனால் பொதுமக்களின் நலன் கருதியும், பேரூராட்சிக்கு வருவாய் இழப்பீடு இல்லாத வகையிலும் மட்டன் கடைகள் உரிய கட்டணத்தினை பேரூராட்சியில் செலுத்தி ஆட்சேபணை இல்லாத இடத்தில் மன்ற அனுமதி பெற்று தற்காலிகமாக நடத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டதாகவும், மேலும் பொதுமக்களிடமிருந்து இறைச்சிக் கடைகள் குறித்து புகார்கள் ஏதேனும் வரப்பெற்றால் சம்பந்தப்பட்ட கடைகள் உடன் அப்புறப்படுத்தப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டதாக தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

பேரூராட்சி பகுதிகளில் இறைச்சிக் கடைகள் தனி நபர் கட்டிடங்களில் செயல்பட்டு வருவதாகவும், சாலைகள் மற்றும் கழிவு நீரோடைகளின் மீது ஆக்கிரமித்து தனியாக இறைச்சிக் கடைகள் ஏதும் நடத்தப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். பேரூராட்சி பகுதியில் உள்ள மழை நீர் வெள்ள வடிகாலின் மீது குடியிருப்பு மற்றும் கடைகளுக்கு செல்லும் விதமாக அணுகு பாதை வசதி ஏற்படுத்தப்பட்டு பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வருவதாவும் கழிவு நீரோடைகள் மற்றும் வெள்ள வடிகால் ஓடைகளிலோ மழை நீரோ கழிவு நீரோ தேக்கம் அடையாதவாறு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கல்லிடைக்குறிச்சி – சிங்கம்பட்டி மெயின் ரோட்டில் பஞ்சாயத்திற்கு சொந்தமான இடம் பஞ்சாயத்து நில அளவரால் சாலை பகுதி ஆக்கிரமிக்கப்பட்ட இடம் என அறிக்கை பெறப்பட்டதின் அடிப்படையில் பேரூராட்சியின் மூலம் ஆக்கிரமிப்புகள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், மேற்படி ஆக்கிரமிப்புகள் அகற்றியது தொடர்பாக ஆக்கிரமிப்புதாரர் திருமதி ராஜம்மாள் என்பவரால் அம்பாசமுத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண் O.S. No. 59/2011 வழக்கு தொடரப்பட்டு விசாரணையில் இருந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் பேரூராட்சி நிர்வாகம் ஆக்கிரமிப்பிற்கு ஒத்துழைப்பு அளித்து வருவதாக மனுதாரரால் அளிக்கப்பட்ட புகார் உண்மைக்கு புறம்பானது எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சிப் பகுதியில் 2011 ஆம் ஆண்டு மக்கட்தொகை 26,398 எனவும் நாளொன்றுக்கு பேரூராட்சி மூலம் 27.80 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். குடிநீர் விநியோகமானது பேரூராட்சி பகுதியில் விநியோகிக்கப்படவேண்டிய குடிநீர் அளவினை விட கூடுதலாகவே 105 LPCD என்ற அளவில் விநியோகம் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். இருப்பினும் தொடர் மின்தடை மற்றும் மின் மோட்டார் பழுது ஆகிய தொழில் நுட்ப காரணங்களால் விநியோகம் செய்யப்படும் கால அளவு குறைவு ஏற்பட்டுள்ளதே தவிர தினசரி குடிநீர் விநியோகத்தில் தடை ஏதும் இல்லை எனவும் மேடான பகுதிகளில் முழு அழுத்தத்தால் தண்ணீர் கிடைக்கவில்லை என்று வரப்பெறும் கோரிக்கைகள் மீது உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சரி செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குடிநீர் இணைப்பு கோரி வரப்பெறும் விண்ணப்பங்கள் எதுவும் பேரூராட்சியால் நிராகரிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியில் 2004-05ம் நிதியாண்டில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பேரூராட்சி புதிய பேருந்து நிலைய வளாகத்தில் வாரச் சந்தை கட்டிடங்கள் மற்றும் இறைச்சிக் கடை கட்டிடங்கள் கட்டப்பட்டு 2005-06ம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும், 2008-2009ம் ஆண்டில் பேரூராட்சி பேருந்து நிலையம் விரிவாக்க பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் பேருந்து நிலையத்தில் கட்டுமானப் பணிகள் விரிவாக்க பணிகள் நடைபெற்றதால் இறைச்சி கடைகள் நடத்த இயலாத சூழ்நிலையில் இறைச்சிக் கடைக்காரர்கள் கடைகளை இரயில்வே தண்டவாளத்திற்கு தென்புறம் கிராமப் பஞ்சாயத்து பகுதியான மூலச்சி, வைராவிக்குளம் பகுதிகளில் கடைகள் வைத்து வியாபாரம் செய்து வந்த காரணத்தினாலும் 2008-09 மற்றும் 2009-10 நிதியாண்டுகளில் மேற்படி கடைகளுக்கான கட்டணம் பேரூராட்சி பகுதிகளில் நடத்தப்பட்ட கடைகளுக்கு மட்டும் வசூல் செய்யப்பட்டதாகவும், பிற ஊராட்சி பகுதிகளுக்கு வியாபாரிகள் சென்றதால்தான் கட்டணத் தொகை குறைந்துள்ளது எனவும் பேரூராட்சி பகுதிகளில் கடைகள் நடத்தப்படாத நிலையில் 2008-09, 2009-10ம் ஆண்டுகளில் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். 2005-06 ஆண்டு முதல் இறைச்சிக் கடைகள் மூலம் கீழ்கண்டவாறு தொகை வரவினமாக வரப்பெற்றுள்ளதாகவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்

| வ.எண். | ஆண்டு | வரவினம் தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | 2005-06 | 18208-00 |
| 2. | 2006-07 | 39060-00 |
| 3 | 2007-08 | 35220-00 |
| 4. | 2008-09 | 16880-00 |
| 5 | 2009-10 | 18180-00 |
| 6. | 2010-11 | 33060-00 |
| 7. | 2011-12 | 33060-00 |
| 8 | 2012-13 | 57010-00 |
| 9 | 2013-14 | 59960-00 |
| 10 | 2014-15 | 56510-00 |

மேற்கண்ட விவரப்படி, பேரூராட்சியில் இறைச்சிக் கடைகள் மூலம் வரவினம் பெறப்பட்டுள்ளதாகவும், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியில் 2009-10ம் ஆண்டில் பேருந்து நிலையத்தில் ரூ 20.00 லட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிலைய அபிவிருத்தி பணிகளும், ரூ 15.00 லட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் பணிகளும் நடைபெற்று வந்ததால் பேருந்து நிலைய வளாகத்தில் இறைச்சிக் கடைகளுக்கு பொதுமக்கள் வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டு வியாபாரம் இன்றி இருந்த காரணத்தினால் 2008-09, 2009-10 ஆண்டுகளில் வரவினத்தில் குறைவு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி பகுதியில் உள்ள இறைச்சிக் கடைகள் மற்றும் மீன் கடைகள் நடத்தி வரும் வியாபாரிகள் பேரூராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வளாகத்தில் உள்ள இறைச்சிக் கட்டிடத்தில் வைத்து விற்பனை செய்ய முடியாத சூழ்நிலையில் இறைச்சிக்

கடைகள் கட்டிடமானது பாதுகாப்பு வசதி, கதவுகள், குடிநீர், மின் வசதி, கழிவு நீர் வெளியேற்றத்திற்கான அடிப்படை வசதிகள் ஏதுமின்றி திறந்த வெளியில் 10x6 அளவில் பிளாட்பாரம் கடைகளாக உள்ளதால் இறைச்சிக் கடைக்காரர்கள் யாரும் மேற்படி கடைகளில் வைத்து வியாபாரம் செய்ய முடியவில்லை எனவும் 2016-17ம் ஆண்டிற்கான ஏல அறிவிப்பில் இறைச்சிக் கடைகளுக்கான ஏலத்திலும் மறு ஏலத்திலும் யாரும் கலந்து கொள்ளாமல் உள்ளதை கருத்தில் கொண்டு மேற்படி இறைச்சிக் கடைகள் கட்டிடம் ஏலம் விடுவதை தவிர்த்து பேரூராட்சி பகுதிகளில் வாடகை கட்டிடங்களில் செயல்பட்டு வரும் இறைச்சிக் கடைகளுக்கு அனுமதிப்பது தொடர்பாக பேரூராட்சி மன்றத்தின் 04.03.2016ம் தேதிய தீர்மான எண்.427ன் படி தீர்மானம் கீழ்காணும் விவரப்படி நிறைவேற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறைச்சிக் கூடத்தினையொட்டி திருமண மண்டபங்கள், சமுதாயக் கூடம், மேல்நிலை நீர்த்தேக்கத் தோட்டி மற்றும் பேருந்து நிலையம், வணிகவளாகம் , பள்ளிக் கட்டிடம் ஆகியவை இருப்பதால் இறைச்சி உண்ணும் பறவைகள் மூலம் சுகாதார கேடு ஏற்படுவதாகவும், மேலும் மேற்படி இறைச்சிக் கடைகளை ஒட்டியே காய்கனி அங்காடிகள் உள்ளதால் சைவ உணவு உண்ணும் பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவிப்பதால் இறைச்சிக் கூடத்தினை யாரும் ஏலம் எடுக்க முன்வராததையடுத்து மேற்படி கடை வாடகையினை ரத்து செய்திட தீர்மானிக்கப்பட்டதாகவும், இதன் மூலம் பேரூராட்சிக்கு இழப்பு ஏற்படுவதை தவிர்க்கும் நோக்கில் உரிமக் கட்டணம் ஆண்டு ஒன்றுக்கு ரூ 2000/- நிர்ணயம் செய்து பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தாத இடங்களில் கடைகள் நடத்த தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் தீர்மானத்தின் அடிப்படையில் 2016-17ம் ஆண்டு முதல் இறைச்சிக் கடைகள் கட்டிடங்கள் மூலம் வாடகை வரவினம் ரத்து செய்தும் இறைச்சிக் கடைகளுக்கு ஆண்டு தோறும் உரிமக் கட்டண வசூல் செய்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பொருள் தொடர்பாக உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையினரால் எந்தவிதமான தடைகளும் எழுப்பப்படவில்லை எனவும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

முனறயீட்டு மனுதாரர் தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் பேரூராட்சியில் இயங்கும் இறைச்சிக் கூடங்கள், பேரூராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பு, குடிநீர் இணைப்புகள் மற்றும் ஆக்கிரமிப்புகள் போன்ற தலைப்புகளில் கேட்ட 14 கடிதங்களுக்கு உரிய காலங்களில் பதில் அனுப்பி அதன் விவரத்தினை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி அவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்ட விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களால் பேரூராட்சி பகுதிகளில் உள்ள இறைச்சிக் கடைகள் வளாகத்தினை ஆய்வு செய்தும் கோப்புகளை ஆய்வு மேற்கொண்டும் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி பேரூராட்சி பகுதியில் சுகாதாரக்கேடு ஏதும் ஏற்படாத வண்ணம் இறைச்சிக் கடைகள் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சிகளின் இயக்ககத்திற்கு அளிக்கப்பட்ட மனுதாரரின் கோரிக்கைகள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகியோரால் உரிய கோப்புகளுடன் பேரூராட்சிகளின் இயக்ககத்திற்கு சென்று இறைச்சிக்

கடைகள் சம்பந்தமான புகார்களுக்கான நடவடிக்கைகள் குறித்து விரிவான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரரது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் வழங்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரரால் அளிக்கப்பட்ட மேல் முறையீடுகளுக்கும் உரிய தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி பகுதியில் உள்ள அனைத்து பொதுமக்களுக்கும் முழு அளவில் சுகாதார வசதிகள், பாதுகாப்பான குடிநீர் வசதிகள், சாலை வசதிகள் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் மேற்கொள்ள பணிகள் திட்டமிடப்பட்டு தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி அனைத்து திட்டப் பணிகளும் முழு அளவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சமூக ஆர்வலரான மனுதாரரால் ஒரே பொருள் தொடர்பாக தொடர்ந்து ஒன்பது ஆண்டுகளாக திரும்ப திரும்ப கேள்விகள் கேட்கப்பட்டு பேரூராட்சி நிர்வாகத்திற்கு வேண்டுமென்ற இடையூறு ஏற்படுத்தி வருவதாகவும், சட்ட விதிமுறைகளுக்குட்பட்டும் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டும் பேரூராட்சியில் மக்கள் நலப்பணிகள் நடைபெற்று வருவதாகவும் கல்லிடைகுறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். பேரூராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் இறைச்சிக் கடைகள் யாவும் அவ்வப்போது பேரூராட்சி மன்றம் முடிவு செய்யும் தீர்மானத்தின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 31.08.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையின் நகலினை முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பிவைத்து அதன் மீதான விளக்கம் / ஆட்சேபணையினை இரண்டு வாரங்களில் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் தனது 14.09.2017ம் நாளிட்ட அறிக்கையில் தான் ஏற்கனவே தெரிவித்த புகார்களுக்கு செயல் அலுவலர் கொடுத்துள்ள அறிக்கை முரண்பாடாக உள்ளது எனவும் பேரூராட்சி செயல் அலுவலரின் 12.05.2017ம் நாளிட்ட அறிக்கையில் பல தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஆக்கிரமிப்புகள் சம்பந்தமாகவோ, சுகாதார கேடு சம்பந்தமாகவோ, வருவாய் இழப்பீடு சம்பந்தமாக தான் தெரிவித்த புகார்களுக்கான உரிய விளக்கம் அளிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். பொதுமக்களின் சுகாதாரம், உயர்நீதிமன்றம் உச்சநீதிமன்ற தீர்ப்புகளுக்கு எதிராக ஆக்கிரமிப்பு கடைகள் அமைத்து தரமற்ற இறைச்சி வகைகளை விற்பதும், கழிவு நீர், வெள்ள வடிகால் ஓடைகளை அடைத்து இறைச்சிக் கழிவுகளை ஓடையில் கொட்டுவதும், சுகாதார பணியாளர்கள் கழிவு நீர் ஓடைகளில் இறங்கி சுத்தம் செய்ய முடியாதபடி அடைப்புகள் ஏற்படுத்தி வைரஸ் நோய்களை ஏற்படுத்த பேரூராட்சி நிர்வாகமே காரணமாக உள்ளதை ஏற்றுக் கொள்ள இயலாது எனவும் தனது அறிக்கையில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.12.03.1998ல் பேரூராட்சி வெளிப்பகுதியில் சுகாதாரக் கேட்டினை உண்டாக்கும் இறைச்சிக் கடைகள் அனைத்தையும் பேரூராட்சி சந்தை கீழ் பகுதியில் உள்ள தனி இடத்தில் வைத்து நடத்திக் கொள்ளவேண்டும் என தீர்மானம் நடைமுறையில் உள்ளபோது 29.09.2010 ல் தீர்மானம் எண் 199ன்படி தற்காலிக இறைச்சிக் கடைகளை வெளியிடங்களில் நடத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தினை சுட்டிக்காட்டி பேரூராட்சி செயல் அலுவலர் வெளிப்புற இறைச்சிக்

கடைகளை அப்புறப்படுத்தி அரசால் கட்டி கொடுக்கப்பட்ட 18 இறைச்சி கடைகள் உள்ள சந்தை கீழ்ப் பகுதிக்கு இறைச்சிக் கடைகளை கொண்டு வரவில்லை எனவும், இத்தீர்மானம் ஆக்கிரமிப்பு இறைச்சி கடைக்காரர்களுக்கு சாதகமாகவும், பொதுமக்களின் சுகாதார கேட்டிற்கு வழி வகுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். எனவே தனது மனுவினை கருணையுடன் ஏற்று, மேற்கொண்டு ஆட்சேபணை மற்றும் கூடுதல் விளக்கங்களை நேரில் ஆஜராகி தெரிவிக்க உத்திரவிட கோரியும் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 08.11.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி பொருள் சம்பந்தமாக தங்களது வாக்குமூலங்களை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்யக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் 10.01.2018 அன்று ஆஜராக கோரி முறையிட்டு மனுதாரர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர், கல்லிடைக்குறிச்சி ஆகியோர்களுக்கு ஆணையிடப்பட்டது.

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் 10.01.2018ல் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை மனுதாரரின் ஆட்சேபணை/விளக்கங்களின் அடிப்படையில் கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

".....தான் 24.11.2014 முதல் கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், இதற்கு முன்னர் கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும் தெரிவித்துள்ளார். திரு ஐசக் பொன்னுதுரை என்பவரின் 10.04.2017ம் நாளிட்ட மனு விவரம் தனக்கு தெரியும் எனவும், இது சம்பந்தமாக தன்னால் 12.05.2017ல் ஒரு விளக்க அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகவும், திரு ஐசக் பொன்னுதுரை அவர்களின் புகார் குறித்தான தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**ஆட்சேபணை 1க்குரிய விளக்கம்.**

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியில் 12.03.1998ல் இயற்றப்பட்ட தீர்மான எண் 232 ஐ தான் மறைக்கவில்லை எனவும், பேருந்து நிலையம் விரிவாக்கம், வணிக வளாக கட்டிடம், திருமண மண்டபம், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகள் செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதால் பேருந்து நியைத்திற்கு கீழ்புறம் உள்ள இடத்தில் இறைச்சி கடைகள் நடத்தி வந்ததை தெருப் பகுதிகளில் ஆட்சேபணையற்ற இடங்களில் கடைகள் நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

**ஆட்சேபணை 2 க்குரிய விளக்கம்.**

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வாரச்சந்தை கட்டிடம் கட்டுவதற்கு ரூ 18.00 லட்சம் அனுமதிக்கப்பட்டு வார சந்தை கட்டிடம் கட்டப்பட்டதாகவும், வாரச்சந்தை கட்டிடப் பகுதியில் மட்டும் இறைச்சிக் கடைகள் விற்பனைக்காக 10 x 6 என்ற அளவில் திறந்த நிலையில் கடைகள் உள்ளதாகவும் இந்த கடைகளில் மின்சாரம், குடிநீர் பாதுகாப்பு போன்ற எந்த அடிப்படை வசதிகளும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

**ஆட்சேபணை 3க்குரிய விளக்கம்.**

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி மன்ற தீர்மான எண். 199/நாள் 29.09.2010 ம் தேதியிட்ட தீர்மானத்தில் பேரூராட்சி மன்றத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக தீர்மானிக்கப்பட்ட முடிவுகளின்படி செயல் அலுவலராகிய தான் அரசு பணியாளர் என்ற நிலையில் தனது பணியினை செய்து வருவதாகவும் உறுதி அளித்துள்ளார். மன்ற

தீர்மானத்தினை செயல்படுத்தும் அலுவலர் என்ற நிலையில் தனது பணியினை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

**ஆட்சேபணை 4 க்குரிய விளக்கம்.**

கல்லிடைக்குறிச்சி சிறப்புநிலைப் பேரூராட்சி பகுதியில் உள்ள செங்கம்பட்டி சாலை மெயின் ரோடு, ரயில்வே ஸ்டேஷடன் ரோடு, 6ம் நெம்பர் ரோடு பகுதிகளில் சாலைகள் நெடுஞ்சாலைத்துறை பராமரிப்பில் உள்ளதாகவும் எனவே நெடுஞ்சாலைத்துறை, வருவாய்த்துறை, நில அளவைத்துறை, காவல் துறை உள்ள அனைத்து துறைகளையும் ஒருங்கிணைந்து ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளதாகவும், சிங்கம்பட்டி சாலையில் கழிவு நீர் ஓடை பெரிய வாய்க்கால்களாக உள்ளதால் ஓடையினை ஒட்டியுள்ள குடியிருப்புகளுக்கு செல்வதற்காக பாதை பாலம் அமைக்க பேரூராட்சி மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இவற்றில் தற்காலிக பந்தல் அமைத்து குடியிருப்புதாரர்கள் வியாபாரம் செய்து வருவதாகவும் இதனால் போக்குவரத்திற்கோ, பொதுமக்களுக்கோ எந்தவிதமான இடையூறும் இல்லை எனவும் தனது விளக்கத்தில் தெரிவித்துள்ளார்.

**ஆட்சேபணை 5 க்குரிய விளக்கம்.**

அம்பாசமுத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண். O.S.59/2011ன்படி கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியின் மீது ஆக்கிரமிப்பாளர்களால் வழக்கு பதிவு செயயப்பட்டு வழக்கு நடைபெற்று வந்ததாகவும், மேற்படி வழக்கு 27.07.2017ல் தள்ளுபடி செய்து தீர்ப்பு அளிக்கப்பட்ட நிலையில் அம்பாசமுத்திரம் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்து AS. எண் 44/2017 வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். வரிவிதிப்பு எண் 9978, கதவு எண் 75F என்ற வரிவிதிப்பு ரசீது திருமதி. ராஜம்மாள் என்பவரின் வேறு கட்டிடத்திற்குரியது எனவும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தில் உள்ள தற்காலிக கடைக்கு பேரூராட்சி மூலம் வரி விதிப்பு ஏதும் வழங்கப்படவில்லை எனவும், வருவாய்த்துறையினர் மூலம் பட்டா வழங்கப்பட்ட விவரம் குறித்து பேரூராட்சி அலுவலகத்தில் ஆவணம் ஏதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

**ஆட்சேபணை 6 க்குரிய விளக்கம்.**

2009–10 ம் ஆண்டில் கூடுதலாக மின் தடை இருந்து வந்ததால் குடிநீர் விநியோகத்தில் முழுமையான அளவு வழங்க இயலாமல் இருந்ததாகவும், மேலும் அந்த ஆண்டில் குடிநீர் வழங்கும் விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். குடிநீர் மற்றும் மின்தடை சீரான பின்னர் தொடர்ந்து குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

**ஆட்சேபணை 7 க்குரிய விளக்கம்.**

பேரூராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏதுமின்றி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்து மேலும் சில கூடுதல் விளக்கங்களையும் தனது வாக்குமூலத்தில் கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை கொண்டு செயல்பட்டு வரும் பேரூராட்சி எனவும், பேரூராட்சி மன்றத்தால் நிறைவேற்றப்படும்

தீர்மானங்களை செயல்படுத்தும் பொறுப்பில் செயல் அலுவலராக தான் உள்ளதாகவும் இதன் பொருட்டு கடந்த மற்றும் நடப்பு காலங்களில் இயற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியில் பொது சுகாதாரம், குடிநீர், மின் வசதி, சாலை வசதி உட்பட அனைத்து அடிப்படை வசதிகளையும் எவ்வித குறைபாடுகளுக்கும் இடமின்றி செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், மேலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் செயல்பாடு குறித்து மாவட்ட ஆட்சியரின் விருதினையும் பெற்றுள்ளதாக தனது வாக்குமூலத்தில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

பேரூராட்சி இறைச்சிக் கடைகள் நடத்திய இடம் ஒதுக்குப் புறமாக இருந்ததாகவும் ஏற்கனவே இறைச்சிக் கடை நடத்திய இடம் காய்கறி கடைகள் நடத்தப்பட்டு அதில் ஒரு பகுதி மட்டும் இறைச்சிக் கடைகள் நடத்தப்பட்டு வந்ததாகவும் தனது வாக்குமூலத்தில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேற்படி இறைச்சிக் கடைகள் 2005-06ம் ஆண்டு முதல் 2009-10ம் ஆண்டு வரை ஏலத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டமைக்கான காரணங்கள் அந்தந்த நேரத்தில் பணிபுரிந்த செயல் அலுவலர்களுக்கு தெரியும் எனவும் திருமதி ராஜம்மாள் என்பவர் ஆக்கிரமித்த இடம் 2011ம் ஆண்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாகவும், இது சம்பந்தமாக அம்பாசமுத்திரம் மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 59/2011ன்படி தீர்ப்பு பேரூராட்சிக்கு சாதகமாக வழங்கப்பட்டுள்ளதாகவும், இதனை எதிர்த்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அம்பாசமுத்திரத்தில் மேல் முறையீட்டு எண் A.S.No. 44/2017 எண்ணிட்ட வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளதுடன் திரு முருகன் என்பவர் விக்கிரமசிங்கபுரம் என்ற இடத்தில் பணிபுரிவதாகவும் மேற்படி ஆக்கிரமிப்பு அகற்றப்படவில்லை என தெரிவித்திருப்பது தவறான குற்றச்சாட்டு எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். வெள்ள வடிகால் ஓடை மற்றும் கழிவு நீர் ஓடை மீது பாதை அமைக்கப்பட்டு வீட்டு உரிமையாளர்கள் பயன்படுத்தும் வகையில் வைத்துள்ளதாகவும் இப்பேரூராட்சியில் டெங்கு காய்ச்சலால் இறப்பு ஏதும் ஏற்படவில்லை எனவும் கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

10.01.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனுதாரர் திரு ஐசக் பொன்னுதுரை நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

".......கல்லிடைக்குறிச்சி சிறப்பு நிலை பேரூராட்சி தொடர்பான சில புகார்கள் அடங்கிய 10.04.2017ம் நாளிட்ட முறையீட்டு மனு தன்னால் அளிக்கப்பட்டது எனவும், அந்த மனுவில் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் திரு இசக்கிபாண்டியன், முன்னாள் செயல் அலுவலர்கள் திரு ராஜமாணிக்கம், திரு அப்துல்ஜப்பார், மற்றும் தற்போதைய செயல் அலுவலர் திரு அ. முத்துக்குமார் ஆகியோர் எதிர் மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். கல்லிடைக்குறிச்சி சிறப்பு நிலை பேரூராட்சியில் 2004-05ம் ஆண்டில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர்புற அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சந்தைகள் மற்றும் மட்டன் ஸ்டால் கடைகள் 18 எண்கள் ரூ 18.00 லட்சம் மதிப்பீட்டில்

கட்டப்பட்டதாகவும், இக்கடைகளை ஏலம் விடப்பட்டதில் 2005–06ம் ஆண்டுமுதல் 2009–10 ஆண்டுமுடிய குறைவான தொகைக்கு ஏலம் விடப்பட்டதால் பேரூராட்சிக்கு இழப்பீடு ஏற்பட்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

12.03.1998ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக 29.09.2011ல் திரு.இசக்கிபாண்டியன்,பேரூராட்சி முன்னாள் தலைவர் முன்னிலையில் இயற்றப்பட்ட தீர்மானத்தின்படி கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியுடைய மேற்கு பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் இறைச்சி வாங்குவதற்கு வெகுதூரம் செல்லவேண்டியுள்ளதாகவும் மேலும் பேரூராட்சிக்கு சொந்தமான மேற்படி கடைகளில் போதிய அடிப்படை வசதிகள் இல்லை என்ற காரணத்தினாலும் இதனால் அருகில் உள்ள மூலச்சி மற்றும் வைராவிக்குளம் பகுதிகளில் சென்று இறைச்சி வாங்கி வருவதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். பேரூராட்சி பகுதியில் வெளிப்புறத்தில் பேரூராட்சிக்கு சொந்தமான இடத்தில் இறைச்சிக் கடைகள் நடத்த அனுமதி அளித்து தீர்மானம் இயற்றியதாகவும் இதன் மூலம் இரயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டாப் முதல் சந்தை வரை உள்ள கழிவு நீர் ஓடையில் சாலைகள், வெள்ள வடிகால் ஓடைகள் மீது இறைச்சி கூடங்கள் அமைத்து கடைகள் நடத்திவருவதாகவும் இதன் மூலம் நீர் வழி ஆதாரங்கள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இது குறித்து தன்னால் சார் ஆட்சியர் முதல் பேரூராட்சி இயக்குநர் வரை பல மனுக்கள் கொடுத்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்தள்ளார்.

2011–12ம் ஆண்டில் 436 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் 2009–10ம் ஆண்டில் மிக குறைவாக 13 குடிநீர் இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். 01.03.2013 அன்று ஆக்கிரமிப்பு சம்பந்தமாக சார் ஆட்சியரால் உரிய ஆணைகள் வழங்கப்பட்டும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்றவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இறைச்சிக் கடை உரிமையாளர்களுக்கு சாதகமாக பேரூராட்சி நிர்வாகம் நடந்து கொள்வதாகவும் தெரிவித்துள்ளார். 24.08.2000 அன்றைய தீர்மான எண் 197ன்படி கல்லிடைக்குறிச்சி–சிங்கம்பட்டி மெயின் ரோட்டில் உள்ள காலிமனை பேரூராட்சிக்கு சொந்தமான இடம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும், அதில் பொது கிணறு அடிபம்பு இணைப்புகள் இருந்ததாகவும், திருமதி ராஜம்மாள் என்பவர் மேற்குறிப்பிட்ட பொது கிணறு மற்றும் அதை சுற்றி இடத்தினை ஆக்கிரமிப்பு செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கிடைக்காதவாறு செய்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். இது குறித்து தன்னால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி கேள்வி கேட்டபோது இது தனி நபருக்கு சொந்தமான இடம் இல்லை எனவும் பேரூராட்சிக்கு சொந்தமான இடம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் அதே இடத்திற்கு கட்டிடமே இல்லாத நிலையில் வீட்டு வரி இரசீது வழங்கி மோசடி செய்துள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். அம்பாசமுத்திரம் துணை வட்டாட்சியர் மேற்படி இடத்திற்கு பட்டா வழங்கியுள்ளதாகவும் அதன்படி மேற்படி இடத்தின் மதிப்பு ரூ. 10.00 லட்சம் என தெரியவருவதாகவும், திருமதி ராஜம்மாள் என்பவரின் மூத்த மகன் திரு.முருகன், என்பவர், விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியில் சுகாதார மேற்பார்வையாளராக பணிபுரிவதால் பேரூராட்சி நிர்வாகம் மேலே குறிப்பிட்ட ஆக்கிரமிப்பினை அகற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

திரு ந. இசக்கிமுத்து என்பவர் பேரூராட்சி வணிக வளாகத்தில் உள்ள 18 கடைகளில் ஒரு கடையினை பெற்றுள்ளதாகவும் அதனை பினாமியாக பயன்படுத்தி அரசு புறம்போக்கு இடத்தில் கடை அமைத்து அதற்கு சொத்து வரி ரசீதும் பேரூராட்சியால் பெற்றுள்ளதாகவும் இதன் மூலம் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பேரூராட்சிக்கு வெளியில் ஆக்கிரமிப்பு செய்து தற்போது செயல்பட்டு வரும் இறைச்சிக் கடைகளை பேரூராட்சி வணிக வளாகத்திற்குள் கொண்டு செல்லவும், அரசு பொதுக்கிணற்றினை ஆக்கிரமிப்பில் இருந்து அகற்றி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், நீர் வழி போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் செயல்படவும் உரிய ஆணைகள் வழங்கவும் தனது வாக்குமூலத்தின் மூலம் கேட்டுக் கொண்டுள்ளார். இது சம்பந்தமாக ஏற்கனவே பேரூராட்சி செயல் அலுவலர் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கை விவரம் தனக்கு வரப்பெற்று அதற்கான தனது விளக்கத்தினை 14.09.2017ல் கடிதம் மூலம் சமர்ப்பித்துள்ளதாகவும் அதனையும் தனது வாக்குமூலமாக பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்கவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். அம்பாசமுத்திரம் மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் திருமதி ராஜம்மாள் (ஆக்கிரமிப்பாளர்) தொடுத்த வழக்கு எண் 59/2011 ல் வருவாய்த்துறை பட்டா வழங்கியிருந்தாலும் பேரூராட்சி சொத்து வரி விதிப்பு செய்திருந்தாலும் ஆக்கிரமிப்பாளர் ஆக்கிரமிப்பு நிலையில் இருந்து மாற முடியாது எனவம் அது ஆக்கிரமிப்புதான் என நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டதாகவும் அதன் நகல் தற்போது இணைத்துள்ளாதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். நீர்வழித் தடங்கள் அனைததும் ஆக்கிரமிப்பு செய்துள்ளது எனவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் 10.01.2018 அன்று அளித்த வாக்குமூலத்தில், திருமதி ராஜம்மாள் என்பவருக்கு எதிராக அம்பாசமுத்திரம் நீதிமன்றத்தால் வழக்கு எண் 59/2011ல் 27.07.2017ல் வரப்பெற்ற தீர்ப்பினை எதிர்த்து வழக்கு எண் A.S.No. 44/2017ல் தொடரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதை சுட்டிக்காட்டியும் மேற்படி திருமதி ராஜம்மாள் என்பவரின் மகன் திரு.முருகன் என்பவர் விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியில் சுகாதார மேற்பார்வையாளராக பணிபுரிவதால் மேற்படி ஆக்கிரமிப்பு அகற்றப்படவில்லை என பதிவு செய்ததை சுட்டிக்காட்டியும் மேற்படி வழக்கு சம்பந்தமாக எதிர் மனுதாரரான பேரூராட்சி செயல் அலுவலரால் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வாதுரையில் மேற்படி சொத்து பேரூராட்சிக்கு பாத்தியப்பட்டது என்பதால் மேற்படி ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுவிட்டதென தெரிவிக்கப்பட்டுள்ளதை குறிப்பிட்டும் மேற்படி சொத்து மீண்டும் ஆக்கிரமிக்கப்படடுள்ளதா ? அல்லது பேரூராட்சியின் ஒப்புதலுடன் ஆக்கிரமிப்பாளர் கட்டுப்பாட்டில் உள்ளதா ? என்ற விவரங்களுக்கான அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 02.02.2018ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

மேலும், இம்முறைமன்ற நடுவ 02.02.2018ம் நாளிட்ட அழைப்பாணையில் கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி தற்போதைய செயல் அலுவலர், இரு முன்னாள் செயல் அலுவலர், விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி சுகாதார மேற்பார்வையாளர் திரு முருகன் மற்றும் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் திரு க. இசக்கிபாண்டியன் ஆகியோர்கள் மேற்படி

பொருள் குறித்து தங்கள் வாக்குமூலங்களை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 02.04.2018 அன்று நேரில் ஆஜராக ஆணையிடப்பட்டது.

கல்லிடைக்குறிச்சி சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 61/2017 நாள் 19.02.2018ன் மூலம் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

கல்லிடைக்குறிச்சி–சிங்கம்பட்டி மெயின்ரோட்டில் உள்ள பேரூராட்சிக்கு சொந்தமான நிலம் நில அளவரால் சாலை பகுதி ஆக்கிரமிக்கப்பட்ட இடம் என அறிக்கை பெறப்பட்டதில் பேரூராட்சியின் மூலம் ஆக்கிரமிப்புகள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், மேற்படி ஆக்கிரமிப்பு அகற்றியது தொடர்பாக ஆக்கிரமிப்பாளர் திருமதி ராஜம்மாள் என்பரால் அம்பாசமுத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No. 59/2011 ஆக வழக்கு தொடரப்பட்டு மேற்படி வழக்கினை 27.07.2017 அன்று நீதிமன்றம் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்ததாகவும், இதனை எதிர்த்து மனுதாரரான திருமதி ராஜம்மாள் என்பவரால் அம்பாசமுத்திரம் சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு வழக்கு எண் A.S.No. 44/2017 என வழக்கு தொடரப்பட்டு வழக்கானது நிலுவையில் இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி மூலம் வழக்கு கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், ஆக்கிரமிப்பு அகற்றியது தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளதாலும் நீதிமன்ற இறுதி தீர்ப்பிற்கு பின்னர் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்து தற்போது பேரூராட்சி மூலம் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இடம் ஆக்கிரமிப்புகள் ஏதுமின்றி தொடர்ந்து பேரூராட்சி மூலம் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் திரு அ.முத்துக்குமார் இம்முறைமன்ற நடுவத்தில் 02.04.2018ம் நாளன்று தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"....தான் கடந்த 27.11.2014 முதல் கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும், திரு ஐசக் பொன்னுதுரை மனுதாரரது புகார் மனு விவரங்கள் தனக்கு தெரியும் எனவும் தனதுவாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டு விட்டது எனவும் அதன் மீது சம்பந்தப்பட்டவர்கள் வழக்கு தொடர்ந்து அம்பாசமுத்திரம் உரிமையியல் நீதிமன்றத்தில் பேரூராட்சிக்கு சாதகமாகவே ஆணை வழங்கப்பட்டதாகவும், அதனை எதிர்த்து அம்பாசமுத்திரம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண் AS.No.44/2007 என்ற எண்ணில் தொடர்ந்து தற்போது நடந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள சுகாதார மேற்பார்வையாளர் திரு முருகன் என்பவர் ஆக்கிரமிப்பாளர் திருமதி ராஜம்மாள் என்பவருடைய மகன் எனவும், ஆக்கிரமிப்பாளர் திருமதி ராஜம்மாள் என்பவர் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதை எதிர்த்து நீதிமன்றம் சென்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அகற்றப்பட்ட இடங்கள் பேரூராட்சி வசம் உள்ளதாகவும் ஆனால் பேரூராட்சி நட்டு வைத்த அறிவிப்பு பலகையை மட்டும் அவர்கள் அகற்றி விட்டதாகவும் தெரிவித்து இது சம்பந்தமாக காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இதில் திரு.முருகனுடைய குறுக்கீடு எதுவும் தங்கள் நிர்வாகத்தில் இல்லை எனவும், முறைமன்ற நடுவ ஆணைப்படி, கட்டியுள்ள கட்டிடம் பேரூராட்சியால் அனுமதி வழங்கப்பட்ட அளவுகள் குறித்தும் உண்மை நிலை குறித்தும் சரிபார்த்து உரிய நடவடிக்கை எடுத்து அறிக்கை

சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார். திறந்த வெளி கழிவு நீர் வாய்க்கால் உள்ளதால் சிலர் தங்கள் வீடுகளுக்கு செல்வதற்கு தற்காலிக பாதையாக அமைத்து பாலமாக கட்டியுள்ளதாகவும் அதை தான் மனுதாரர் தொடர்ந்து ஆக்கிரமிப்பு என தெரிவித்துள்ளதாகவும், தற்காலிக அணுகு பாதையால் யாருக்கும் எந்த இடைஞ்சலும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மூடிய கழிவு நீர் வாய்க்காலாக மாற்றும்போது மேற்படி தற்காலிக அணுகு பாதைகள் அகற்றப்பட்டுவிடுமென தனது வாக்குமூலத்தில் பேரூராட்சி தற்போதைய செயல் அலுவலர் பதிவு செய்துள்ளார்.

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சிமுன்னாள் செயல் அலுவலர் திரு அ.அப்துல் ஜப்பார் என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் 02.04.2018ல் நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"……தான் 2007 முதல் 2010 வரை கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும், திரு ஐசக் பொன்னுதுரை அவர்களின் மனு விவரம் தனக்கு தெரியும் எனவும் தெரிவித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள இறைச்சிக் கடை பஸ் நிலையம் வழியாக உள்ளே நுழைந்து செல்லவேண்டும் எனவும், பஸ் நிலையம் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் 2001ம் ஆண்டில் கட்டப்பட்டது எனவும், மேற்படி இடம் மிகவும் தொலைவில் உள்ளதாகவும், மேலும் மிகவும் பழுதடைந்துள்ளதாகவும், பகலில் ஆடு, மாடுகள் மேயும் இடமாகவும் சமூக விரோதிகள் கூடும் இடமாகவும் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். 2009–10ம் ஆண்டில் பஸ் நிலையம் கட்டுவதற்கு தனது பணிக்காலத்தில் பேரூராட்சியில் தீர்மானம் இயற்றி அதன் அடிப்படையில் இறைச்சிக் கடைகக்காரர்களுக்கு வேறு இடத்தில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், தெரிவித்து இவ்விசாரணை சம்பந்தமாக தனது வாக்குமூலத்தினை எழுத்து மூலமாக சமர்ப்பித்துள்ளதாகவும் பதிவு செய்துள்ளார்.

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரும் தற்போதைய குலசேகரம் பேரூராட்சி செயல் அலுவலருமான திரு ந. ராஜமாணிக்கம், இம்முறைமன்ற நடுவத்தில் 02.04.2018ல் நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"……தான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம், குலசேகரம் பேரூராட்சியில் பணி புரிவதாகவும், கல்லிடைக் குறிச்சி பேரூராட்சியில் 15.09.2011 முதல் 15.09.2014 வரை செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும் தெரிவித்துள்ளார். அப்போது திரு. இசக்கிபாண்டியன் பேரூராட்சி மன்றத் தலைவராக இருந்ததாகவும், தனக்கு பின்னர் திரு அ.முத்துக்குமார் செயல் அலுவலராக வந்ததாகவும் தற்போது வரை அவரே அப்பணியில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். திரு ஐசக் பொன்னுதுரை மனுதாரரது புகார் மனு குறித்த விவரம் தனக்கு தெரியும் எனவும், ஆக்கிரமிப்புகள் அனைத்து அகற்றப்பட்டுவிட்டது எனவும் அதன் மீது சம்பந்தப்பட்டவர்கள் வழக்கு தொடர்ந்து அம்பாசமுத்திரம் உரிமையியல் நீதிமன்றத்தில் பேரூராட்சிக்கு சாதகமாகவே ஆணை வழங்கப்பட்டதாகவும், இதனையும் எதிர்த்து அம்பாசமுத்திரம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வழக்கு எண் AS.No. 44/2017 என தொடரப்பட்டு நடந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள சுகாதார மேற்பார்வையாளர் திரு முருகன் எனபவர் ஆக்கிரமிப்பாளர் திருமதி ராஜம்மாள் என்பவரின் மகன் எனவும் ஆக்கிரமிப்பாளர் திருமதி ராஜம்மாள் என்பவர் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதை எதிர்த்து நீதிமன்றம் சென்றுள்ளதாகவும், ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இடம் பேரூராட்சி வசம்

உள்ளதாகவும், ஆனால் பேரூராட்சி நட்டு வைத்த அறிவிப்பு பலகையினை மட்டும் அப்புறப்படுத்திவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். இது குறித்து காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டுள்ளதாகவும், திரு முருகனுடைய குறுக்கீடு எதுவும் தங்கள் நிர்வாகத்தில் இல்லை எனவும், தெரிவித்துள்ளார். மேலும் முறைமன்ற நடுவ ஆணைப்படி, மனுதாரர் கட்டியுள்ள இடம் பேரூராட்சியால் அனுமதி வழங்கப்பட்ட அளவுகள் குறித்தும் உண்மை நிலை குறித்தும் அறிக்கை சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்துள்ளார். திறந்த வெளி கழிவு நீர் வாய்க்கால் உள்ளதால் சிலர் தங்கள் வீடுகளுக்கு செல்வதற்கு தற்காலிக பதையாக பாலமாக அமைத்து கட்டியுள்ளதாகவும் இதை மனுதாரர் தொடர்ந்து ஆக்கிரமிப்பு என தெரிவிப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தற்காலிக அணுகு பாதையால் யாருக்கும் எந்த வித இடைஞ்சலும் இல்லை எனவும், மூடிய கழிவு நீர் வாய்க்காலாக மாற்றும்போது மேற்படி தற்காலிக அணுகு பாதைகள் அகற்றப்பட்டுவிடுமெனவும் தனது வாக்குமூலத்தில் கல்லிடைக்குறிச்சி முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

திரு ஆர்.முருகன், விக்கிரமசிங்கபுரம் நகராட்சி துப்புரவு மேற்பார்வையாளர் இம்முறைமன்ற நடுவத்தில் 02.04.2018 அன்று நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"......தான் தற்போது விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளராக 36 வருடங்களாக பணிபுரிந்து வருவதாகவும், மனுவில் குறிப்பிட்டுள்ள திருமதி ராஜம்மாள் என்பவர் தனது தாயார் எனவும், தான் தனது தாயாருக்காக கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி அலுவலகத்தில் எந்தவிதமான பரிந்துரையும் செய்யவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி தற்போதைய துப்புரவு ஆய்வாளர் திரு க.கந்தசாமி இம்முறைமன்ற நடுவத்தில் 02.04.2018 அன்று நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"......தான் கடந்த 10.08.2010 முதல் கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிவதாகவும் திரு ஐசக் பொன்னுதுரை மனுதாரரது மனு விவரங்கள் தனக்கு தெரியும் எனவும் தெரிவித்துள்ளார். ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டுவிட்டது எனவும், அதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்டவர்கள் வழக்கு தொடர்ந்து அம்பாசமுத்திரம் உரிமையியல் நீதிமன்றத்தில் பேரூராட்சிக்கு சாதகமாகவே ஆணை வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இதனை எதிர்த்து அம்பாசமுத்திரம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண் A.S.No. 44/2017 ல் வழக்கு தொடரப்பட்டு தற்போது நடைபெற்று வருவதாகவும், மனுவில் குறிப்பிட்டுள்ள சுகாதார மேற்பார்வையாளர் திரு முருகன் என்பவர் ஆக்கிரமிப்பாளர் திருமதி ராஜம்மாள் என்பவருடைய மகன் எனவும், ஆக்கிரமிப்பாளர் திருமதி ராஜம்மாள் என்பவர் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதை எதிர்த்து நீதிமன்றம் சென்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அகற்றப்பட்ட இடங்கள் பேரூராட்சி வசம் உள்ளதாகவும், ஆனால் அங்கு நடப்பட்டுள்ள அறிவிப்பு பலகையினை மட்டும் முன்னர் ஆக்கிரமிப்பு செய்திருந்த நபர் அப்புறப்படுத்திவிட்டதாகவும் இது சம்பந்தமாக காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. திரு முருகனுடைய குறுக்கீடு எதுவும் தங்கள் நிர்வாகத்தில் இல்லை எனவும், முறைமன்ற நடுவ ஆணைப்படி மனுதாரர் கட்டியுள்ள

கட்டிடம் பேரூராட்சியால் அனுமதி வழங்கப்பட்ட அளவுகள் குறித்து அறிக்கை சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி முன்னாள் தலைவர் திரு க. இசக்கிபாண்டின் தனது வாக்குமூலத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் 10.04.2018 அன்று நேரில் ஆஜாராகி கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"......தான் கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியில் 2006 ஆம் ஆண்டு முதல் 2011 வரையிலும் மற்றும் 2011 ஆம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரையிலும் தொடர்ந்து இருமுறை பேரூராட்சி மன்றத் தலைவராக இருந்ததாகவும், இறைச்சிக் கடைகளை மாற்றுவது தொடர்பாக தீர்மானம் இயற்றியது குறித்து தனக்கு நினைவில்லை எனவும் தெரிவித்துள்ளார். செயல் அலுவலருக்கே இது குறித்து தெரியும் எனவும் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லை என்பதால் தான் அதை மறுப்பதாகவும் தெரிவித்துள்ளார். பேரூராட்சி பகுதியில் ஒரு இடத்தில் ஓடை வருவதால் அதன் மீது தற்காலிகமாக பாலம் ஒன்றினை அங்கு குடியிருப்பவர்கள், வணிகம் செய்பவர்கள் அவரவர் இடத்திற்கு போக அமைத்துள்ளதால் அந்த இடத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் தான் 2001 முதல் 2006 வரை பேரூராட்சி துணைத் தலைவராகவும் தொடர்ந்து 15 ஆண்டுகளாக பேரூராட்சியின் பொறுப்பில் உள்ளதாகவும் ஒரு முறை கூட மனுதாரர் எதற்கும் தன்னை சந்திக்கவில்லை எனவும் எந்த புகாரினையும் அளிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று ஏற்கனவே இருந்த கறி கடைகள் தற்போது உள்ள இடத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், பேரூராட்சியிலுள்ள கறி கடைகள் குறித்து பொதுமக்களிடம் இருந்து புகார்கள் வந்தால் அதை ஆய்வு செய்து கடைகள் மாற்றம் செய்யப்படும் எனவும் தற்போது புகார் மனுதாரர் கொடுத்து இருக்கும் கோரிக்கை நியாயமான முறையில் சட்டத்திற்குட்பட்டு இருந்தால் செயல் அலுவலர் எந்த நடவடிக்கை எடுத்தாலும் தனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரின் புகார் மனு, புகார் மனுவிற்கான பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, கல்லிடைக்குறிச்சி முன்னாள் மற்றும் இந்நாள் பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் முறையீட்டு மனுதாரரின் நேரடி வாக்குமூலம், முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள பேரூராட்சி முன்னாள் தலைவரின் வாக்குமூலம் மற்றும் விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி சுகாதார மேற்பார்வையாளர் திரு முருகன் ஆகியோரின் நேரடி வாக்குமூலங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள பேரூராட்சிக்கு சொந்தமான 18 கடைகளில் போதிய அடிப்படை வசதிகள் இல்லாததாலும், இக்கடைகள் பேரூராட்சி மக்கள் வசிக்கும் பகுதிக்கு வெகு தொலைவில் உள்ளதால் பொதுமக்கள் இறைச்சி மற்றும் மீன் வாங்க வருவது குறைவதால் இங்கு கடை வைத்திருக்கும் நபர்கள் மிகுந்த நஷ்டத்தில் இயங்குவதாக தெரிவித்துள்ளதை தொடர்ந்து இருசாரர்களுக்கும் பொதுவாக பேரூராட்சி பகுதிகளில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் இறைச்சி மற்றும் மீன் கடைகள் வைத்துக் கொள்ளவும், இது சம்பந்தமாக பொதுமக்களிடத்தில் இருந்து புகார் வரும் பட்சத்தில் கடைகள் அப்புறப்படுத்தப்படும் என்ற நிபந்தனையுடன் கடைகள் வைத்துக் கொள்ள அனுமதித்துள்ளதாக கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் தனது

அறிக்கையிலும் நேரடி விசாரணையிலும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி பேரூராட்சியில் திறந்த நிலையில் செல்லும் கழிவு நீர் வாய்க்காலின் மறுபக்கம் உள்ள நபர்கள் தங்கள் வீடுகளுக்கு செல்வதற்கு தற்காலிக பாதையாக பாலம் அமைத்து அதன் மூலம் செல்வதால் இது ஆக்கிரமிப்பு என கொள்வதற்கு இடமில்லை எனவும் மேற்படி கழிவு நீர்வாய்க்கால் மூடி செப்பனிடப்படும்போது இப்பாலப் பாதைகள் அனைத்தும் சரிசெய்யப்படும் எனவும் இப்பாதைகள் மூலம் எவருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். குடிநீர் விநியோகத்தை பொறுத்த மட்டில் 2009-10ம் ஆண்டில் மின் தடை அதிகமாக இருந்த காரணத்தினால் குடிநீர் விநியோகத்தில் முழு அளவில் வழங்க இயலாத நிலை இருந்ததாகவும் அதற்கு அடுத்த ஆண்டுகளில் இந்நிலை சீராக்கப்பட்டதாகவும், மேலும் மேற்படி ஆண்டில் குடிநீர் இணைப்பு வேண்டி விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை எனவும் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

நில ஆக்கிரமிப்பினை பொறுத்தவரை மேற்படி ஆக்கிரமிப்பாளர் திருமதி ராஜம்மாள் என்பவரால் அம்பாசமுத்திரம் உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் பேரூராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியதைத் தொடர்ந்து மேற்படி இடம் பேரூராட்சியால் கையகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மேற்படி இடம் தற்போது ஆக்கிரமிப்பு ஏதுமின்றி பேரூராட்சியின் பராமரிப்பில் / கண்காணிப்பில் உள்ளதாகவும், மேற்படி நீதிமன்ற தீர்ப்பினை எதிர்த்து ஆக்கிரமிப்பாளர் திருமதி ராஜம்மாள் என்பவர் அம்பாசமுத்திரம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண் A.S.44/2017ல் வழக்கு தொடுத்துள்ளாரெனவும், இவ்வழக்கின் தன்மையினை கண்காணித்து தீர்ப்பின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கை மற்றும் நேரடி வாக்குமூலத்தில் உறுதியளித்துள்ளார். மேற்படி ஆக்கிரமிப்பாளர் திருமதி ராஜம்மாள் என்பவரின் மகனும் விக்கிரமசிங்கபுரம் நகராட்சியின் சுகாதார மேற்பார்வையாளருமான திரு ஆர். முருகன் என்பவர் தனது தாயார் செய்துள்ள ஆக்கிரமிப்பு சம்பந்தமாக தான் கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியில் எந்த முறையிடோ குறுக்கீடோ செய்யவில்லை என தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள கூற்றினை கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலரும் தனது வாக்குமூலத்தில் ஏற்றுக் கொண்டுள்ளார். கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவரும் தனது வாக்குமூலத்தில் தான் மேற்படி பேரூராட்சியில் 2001 முதல் 2006 வரை துணைத் தலைவராவும், 2006 முதல் 2016 முடிய 10 ஆண்டுகள் தலைவராகவும் பதவி வகித்ததாகவும் மேற்கண்ட காலங்களில் முறையீட்டு மனுதாரர் இப்புகார் சம்பந்தமாக தன்னை எந்த நிலையிலும் அணுகவில்லை எனவும், மேற்படி இறைச்சி மற்றும் மீன் கடைகள் வைத்துள்ளது சம்பந்தமாக பொதுமக்களுக்கு இடையூறு என புகார்கள் வரும் பட்சத்தில் எவ்வித பாரபட்சமுமின்றி கடைகள் அப்புறப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் மனுதாரர் குறிப்பிட்ட பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண்.199/29.09.2010, சுமார் 7 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலையில் உள்ளதால், தொடர் நடவடிக்கைகள் குறித்து பேரூராட்சி செயல் அலுவலரின் உறுதி அறிக்கையினை ஏற்று இம்முறைமன்ற நடுவ நடவடிக்கை கைவிடப்படலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. இருப்பினும் பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படாததை உறுதி செய்து பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாவண்ணம் தக்க தொடர் நடவடிக்கைகளை சட்ட விதிகளுக்குட்பட்டு மேற்கொள்ளப்படுவதை செயல் அலுவலர் உறுதி செய்து

கொள்ளவேண்டுமெனவும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை முறையே கண்காணித்திட வேண்டுமெனவும் வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு மே, திங்கள் 07–ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–**

செயலாளர்.* 10.5.18

9/5/18

பெறுநர்

1.திரு. டி. ஐசக் பொன்னுத்துரை,
230 மேல் முகம் நாடார் தெரு,
கல்லிடைக் குறிச்சி,
திருநெல்வேலி மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
கல்லிடைக்குறிச்சி சிறப்பு நிலை பேரூராட்சி,
கல்லிடைக்குறிச்சி,
திருநெல்வேலி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
என்.ஜி.ஓ. பி–காலனி,
பெருமாள்புரம் அஞ்சல்,
திருநெல்வேலி – 627 007

நகல்

பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை – 108